# இயேசு ஊழியங்கள்

**105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049**
**போன் : 9003009752**
**ஈமெயில்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org**

கிறிஸ்துவுக்குள் பிரியமான மகளே,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தர் கொடுத்த உன்னத திட்டமாகிய இந்த **Beten Yatsar Club–** ல் இணைந்து, கர்ப்பத்தின் கனியை ஆசீர்வாதமாகப் பெற்றுக்கொண்ட உங்களுக்காகவும் உங்கள் கருவில் வளர்ந்துவரும் குழந்தைக்காகவும் கர்த்தரை நன்றியோடு துதிக்கிறேன்.

ஆண்டவர் இப்போது உங்களுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்த வார்த்தையை வாசித்துப்பாருங்கள் **"ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது" (லூக்கா 1:42).** ஒரு தீர்க்கதரிசன குழந்தையை சுமந்து கொண்டிருக்கும் நீங்கள், மேலே உள்ள கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறபடி, எல்லாரைக் காட்டிலும் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

உங்கள் கருவில் வளர்ந்துவரும் குழந்தையும் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டது. கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு இருக்கும்போது, உங்கள் குழந்தைக்கு எந்த ஒரு நன்மையும் குறைவுபடாது. எந்த தீங்கையும் சாத்தான் உங்கள் குழந்தைக்கும், உங்களுக்கும் கொண்டுவரவே முடியாது. ஆகவே சந்தோஷமாய் இருங்கள். அப்படி நீங்கள் சந்தோஷமாய் இருக்கும் போது அந்த சந்தோஷம், கருவில் உள்ள உங்கள் குழந்தையை நிரப்பும். அப்போது குழந்தை பரிபூரண வளர்ச்சியடையும். எந்த குறையுமின்றி ஆரோக்கியமுள்ள குழந்தையாக பிறக்கும். தாயாக நீங்கள் தேவனை சந்தோஷத்தோடு மகிமைப்படுத்துவீர்கள்

ஆண்டவராகிய இயேசுவின் கரம் உங்களையும் உங்கள் குழந்தையும் ஆசீர்வதித்து பாதுகாத்துக் கொள்வாராக, ஆமென்.

மேலும் ஜெப உதவிக்கு எங்கள் ஜெபவீரர்களை தொடர்புகொள்ளுங்கள் : 044-40500011

**அன்புடன்**



**சாது சுந்தர் செல்வராஜ்**

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*